**மகாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் - பகுதி 1 - 2022**

---

மகாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் - பகுதி 1 இன் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாய சோசலிச குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2015 செப்தெம்பர் 17 ஆம் திகதிய 3267–எஸ்ஆர்ஐ ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் 4.06(அ) பிரிவு மற்றும் 3268–எஸ்ஆர்ஐ (எஸ்எவ்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் 4.03(அ) பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

நிழ்ச்சித்திட்டத்தின் கடன் உடன்டிக்கையின் பிரகாரம், நீர்ப்பாசன அமைச்சு நிகழ்ச்சித்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் இலங்கை மகாவலி அதிகாரசபை மற்றும் நீர்ப்பாசனத் திணைக்களம் என்பன அமுலாக்கல் முகவர்களாக உள்ளன.

நிகழ்ச்சித்திட்டப் பகுதியில் விவசாயம், குடிநீர் மற்றும் வணிக நோக்கங்களிற்காக நீர் வளங்களை பாதுகாப்பாக அணுகுதல் நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கமாகும். வடமத்திய மாகாண கால்வாய் செயற்திட்டம், வடமேல் மாகாண கால்வாய் செயற்திட்டம், மினிப்பே இடதுகரை கால்வாய் புனரமைப்பு செயற்திட்டம் ஆகிய மூன்று கூறுகளின் கீழ் இந்நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்பாடுகள் அமுல்ப்படுத்தப்படுகின்றன.

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், நிகழ்ச்சித்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 26,720.80 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 190 மில்லியனாக இருந்ததுடன் அதில் ரூபா 21,095.37 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 150 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. ரூபா 5,625.43 மில்லியன் மிகுதி தொகை இலங்கை அரசாங்கத்தால் நிதியளிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

நிகழ்ச்சித்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2015 யூன் 24 இல் தொடங்கியிருந்ததுடன் 2019 திசெம்பர் 31 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது. எனினும் நிகழ்ச்சித்திட்ட நடவடிக்கைகளின் பூர்த்தியாக்கல் திகதி 2024 யூன் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

**1.3 அபிப்பிராயம்**

நிகழ்ச்சித்திட்டத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினக் கூற்றினையும் அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிகழ்ச்சித்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிகழ்ச்சித்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. பௌதீக செயலாற்றல்

### 2.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்

| | கூறுகள் | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | தாமதம்/ கணக்காய்வு விடயம் | தாமதங்களிற்கான காரணங்கள் |
|---|---|---|---|---|---|
| | | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு எதிர்பார்க்கப்பட்ட பௌதீக செயலாற்றல் | அடைந்து கொள்ளப்பட்ட செயலாற்றல் | | |
| | | அலகுகள்/ சதவீதம் | அலகுகள்/ சதவீதம் | | |
| (i) | மேல் எலஹெரா கால்வாய் நிர்மாணம் (0+100 கிமீ முதல் 6+226 கிமீ வரை) | 100 | 64 | பெறுகை செயன்முறையில் தாமதம் காரணமாக ஒப்பந்தங்கள் திட்டமிட்ட காலத்திற்குள் வழங்கப்பட்டிருக்கவில்லை. செயற்திட்டக் காலப்பகுதி 2022 யூன் 30 வரை 05 ஆண்டுகளால் நீடிக்கப்பட்டு பின்னர் 2024 யூன் 30 வரை நீடிக்கப்பட்டதால் அசல் திட்டத்தின் பிரகாரம் ஒப்பந்தங்களை பூர்த்தி செய்ய முடியவில்லை. | மேலதிக பணிகள் மற்றும் அளவு மாற்றங்கள், நிர்மாணத்தை முறையாக திட்டமிடாதமை மற்றும் காணி சுவீகரிப்பு நடவடிக்கைகளில் தாமதம் போன்ற காரணங்களால், செயற்திட்டத்தை குறிப்பிட்ட கால எல்லைக்குள் மேற்கொள்ள முடியவில்லை. |
| (ii) | நபதகஹவத்த வாவவிலிருந்து மஹகித்துல நீர்த்தேக்க நுழைவாயில் சுரங்கப்பாதை (5+250 கிமீ முதல் 22+ 460 கிமீ வரை) வரை பிரதான கால்வாயை நிர்மாணித்தல் | 100 | 77 | | |
| (iii) | மஹகித்துல நுழைவாயில் சுரங்கப்பாதை, மஹகித்துல மற்றும் மஹகிருள நீர்த்தேக்கங்கள், மஹகித்துல முதல் மஹகிருள நீர்த்தேக்கம் வரையிலான 3.3 கிமீ நீளமான ஊட்டி கால்வாயின் நிர்மாணம் | 100 | 03 | | |
| (iv) | LB மற்றும் RD கால்வாய்களுக்கான நீர் கட்டுப்பாடு மற்றும் அளவீட்டு வசதிகள் உட்பட மினிப்பே அணைக்கட்டின் உச்சிகளை உயர்த்துதல் | 100 | 82 | | |

**முகாமைத்துவத்தின் பதில்**

(i) MASL, நீர்ப்பாசனத் திணைக்களம் மற்றும் பயனாளிகளின் கோரிக்கையைப் பொறுத்து இந்த ஒப்பந்தப் பொதிகளின் ஆரம்ப வடிவமைப்புக்கள் அவ்வப்போது மாற்றப்பட வேண்டியிருந்தது.

(ii) 2019 ஆம் ஆண்டில், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் காரணமாக வெடிமருந்துகளைப் பெறுவது கடினமான பணியாக மாறியதுடன் இது மொத்த பொருட்கள், நிர்மாணப்

பணிகளுக்கான வெடிபொருட்கள் போன்ற பொருள் பற்றாக்குறையை விளைவித்தது. மேலும் போக்குவரத்துக்கு இடையூறு விளைவிக்கும் தொழிலாளர் மற்றும் இயக்கச் சிக்கல்கள் காணப்பட்டது 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் கொவிட்-19 தொற்று நிலைமை தொழிலாளர் இயக்கம், பொருள் வழங்கல் போன்றன நிர்மாணப் பணியை கணிசமாகக் குறைத்தது. 2022 இன் போது நிதி நெருக்கடியானது நாளாந்த வேலைக்கு நேரடியாக பொருந்தும் நிர்மாணப் பொருட்களின் விலை அதிகரிப்பு மற்றும் எரிபொருளின் பற்றாக்குறை மற்றும் இறக்குமதியின் கட்டுப்பாடு என்பவற்றுடன் இந்த நிலைமையை மோசமாக்கியது,

நீர்ப்பாசன வயல்களுக்கு சீரான நீர் விநியோகத்துடன் இந்தக் நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்ததால், நிர்மாணப் பணிகளுக்கு அவ்வப்போது தடங்கல்கள் ஏற்பட்டன.

(iii) நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் கையகப்படுத்தப்பட்டிருந்த சில காணிகளுக்கு 1986 ஆம் ஆண்டு முதல் நட்டஈடு வழங்கப்படாமல் இருந்ததை PMU உணர்ந்துள்ளது. இதன் காரணமாக ஒப்பந்ததாரரின் செயற்பாடுகளை கட்டுப்படுத்திய வடமேல் மாகாண கால்வாய் செயற்திட்டத்தில் நிர்மாணக் காலத்தில் முழுப் பகுதிக்கும் காணி கையகப்படுத்தும் செயன்முறை ஆரம்பிக்கப்பட வேண்டியிருந்தது. இது இறுதிவரையிலும் குறிப்பிட்ட ஒப்பந்தத்தை பெரிதும் பாதித்தது. மேற்படி தடைகள் இருந்த போதிலும், தற்போது ஆறு ஒப்பந்தப் பொதிகள் ஏற்கனவே பூர்த்தி செய்யப்பட்டுள்ளன, மேலும் நான்கு பேக்கேஜ்கள் இன்னும் செயல்பாட்டில் உள்ளன, மேலும் 4 ஒப்பந்தங்களில் 3 ஒப்பந்தங்கள் 2023 இறுதிக்குள் பூர்த்தி செய்யப்படும்.

**கணக்காய்வாளரின் பரிந்துரை**

(i) மேற்கொள்ளப்பட்ட செலவினங்களின் நலனைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

(ii) ஒப்பந்தத்தை விரைவில் பூர்த்தி செய்வதற்கு ஒப்பந்ததாரர்கள் மற்றும் ஆலோசனை கம்பனிக்கு எழுத்துமூலம் ஏற்றுக்கொள்ளப்படுதல்.

(iii) நிகழ்ச்சித்திட்டமானது அதன் இலக்குகளை அடைந்துகொள்வதற்காக செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் அதன் செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்.

## 2.2 ஒப்பந்த நிர்வாகம்

| இல. | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வடமத்திய மாகாண பெரிய கால்வாய் செயற்திட்டத்தின் கீழ் மொறகஹகந்த நீர்த்தேக்கத்திலிருந்து 6.225 கிலோமீற்றர் நீளத்திற்கு கால்வாய் அமைப்பதற்கான ஒப்பந்தம் 2016 முதல் 2020 வரையான காலப்பகுதியில் உள்ளூர் ஒப்பந்ததாரருக்கு ரூபா 3,254.29 மில்லியன் கிரயத்தில் வழங்கப்பட்டிருந்தது. 2021 மே 31 வரையிலும் நிர்மாணத்தின் முன்னேற்றம் 64 சதவீதம் மாத்திரமே ஆகும். மேலும் ஒப்பந்ததாரரின் நிதி நெருக்கடி காரணமாக வேலையை பூர்த்தி செய்ய முடியவில்லை. ஒப்பந்தம் தொடர முடியாததால் 2021 யூலை 13 இல் இரத்து செய்யப்பட்டது. எவ்வாறாயினும், ஒப்பந்ததாரர் வங்கியில் வைத்திருக்கும் முற்பணங்கள் மற்றும் செயலாற்றல் உத்தரவாதங்களில் இருந்து நட்டத்தை அறவிடுவதை தடுக்கும் | ஒப்பந்ததாரர் நட்டத்தை அறவிடுவதைத் தடுக்கும் வகையில் வழக்குத் தாக்கல் செய்திருந்த போதிலும் நீர்ப்பாசன அமைச்சும் சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஊடாக சட்ட நடவடிக்கை எடுத்துள்ளது. ஒப்பந்ததாரரின் தரப்பு பிணக்குத்தீர்த்தல் செயன்முறைக்கு தோன்றாததால், மத்தியஸ்தரால் நிறுத்தப்பட்டது. சட்ட செயன்முறை மூலம் அறவிடப்பட வேண்டிய முற்பணம் இன்னும் அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும் ஒப்பந்ததாரர் | வங்கி உத்தரவாதங்களை காசாக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வகையில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால், ஒப்பந்ததாரரிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 185.89 மில்லியன் வேலை ஆரம்பிப்பு முற்பணத்தை அறவிட முடியவில்லை. | தற்போது கலைப்பு செயன்முறையில் உள்ளார், இதற்காக நாங்கள் ஏற்கனவே சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனையின் அடிப்படையில் ஒரு கட்சியாக இருப்பதற்கு கோரியுள்ளோம். | |
| (ஆ) | 2018-2020 ஆம் ஆண்டில் மினிப்பே இடதுகரை மற்றும் வலதுகரை கால்வாய்க்கான நீர் கட்டுப்பாடு மற்றும் அளவீட்டு வசதிகள் உள்ளடங்கலாக மினிப்பே அணைக்கட்டின் உயரத்தை உயர்த்துவதற்கான ஒப்பந்தத்தை பூர்த்தி செய்வதற்கு வெளிநாட்டு ஒப்பந்ததாரருக்கு ரூபா 1,864.80 மில்லியன் விலையில் வழங்கப்பட்டிருந்தது. ஒப்பந்தம் 2021 யூலை 13 வரை நீடிக்கப்பட்ட போதிலும் பின்னர் 2023 செப்தெம்பர் வரை நீடிக்கப்பட்டது, எனினும், மீளாய்வாண்டின் இறுதியளவில் நிர்மாண முன்னேற்றம் 82.5 சதவீதமாக மாத்திரமே இருந்தது. ஒப்பந்தத்தை பூர்த்தி செய்வதில் தாமதம் ஏற்பட்டதால், ஒப்பந்த விலை வேறுபாடு ரூபா 112.09 மில்லியனாக இருந்தது. மேலும், மேலதிக பணிகள் மற்றும் அளவு வேறுபாடுகளுக்காக ஒப்பந்ததாரருக்கு ஒதுக்கப்பட்ட நிதியேற்பாட்டை விட ரூபா 91.27 மில்லியன் மேலதிகமாக செலுத்தப்பட்டுள்ளது. | ஒப்பந்த கால நீடிப்பு தொடர்பாக, வழங்கப்பட வேண்டிய காலநீடிப்பை மேவுகை செய்து 2023 செப்தெம்பர் அளவில் பூர்த்தி செய்யப்படும் இலக்கு திகதியை அடைந்துகொள்வதற்கான மைல்கற்களுடன் திருத்த உடன்படிக்கை ஏற்கனவே கைச்சாத்திடப்பட்டுள்ளது. தற்போதைய நிர்மாண முன்னேற்றம் 86% ஆகும், மேலும் ஒப்பந்ததாரர் பூர்த்தி செய்யப்படும் இலக்கு திகதிகளை அடைந்துகொள்வதற்கு அதிக வளமூலங்களை ஒப்பந்ததாரர் திரட்டியுள்ளார். | விலைவாசி உயர்வு இழப்பைக் குறைத்து, குறிப்பிட்ட காலத்திற்குள் பணியை பூர்த்தி செய்வதற்கு திருத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | (i) வடமேல் மாகாண கால்வாய் செயற்திட்டத்தின் கீழ் 5.25 கிலோமீற்றர் முதல் 22.30 கிலோமீற்றர் வரையிலான நபதகஹவத்தையிலிருந்து மஹகிதுல நீர்த்தேக்க நுழைவாயில் சுரங்கப்பாதை வரையிலான பிரதான கால்வாயின் நிர்மாணிப்பு 2018-2021 ஆம் ஆண்டுக்குள் பூர்த்தி செய்யப்படுவதற்கு வெளிநாட்டு ஒப்பந்ததாரருக்கு ரூபா 6,284 மில்லியனிற்கு வழங்கப்பட்டிருந்தது. எனினும், இது பின்னர் 2023 திசெம்பர் 05 வரை நீடிக்கப்பட்டதுடன் மீளாய்வாண்டின் இறுதியில் நிர்மாண முன்னேற்றம் 77 சதவீதமாக இருந்தது. எனினும் ஒப்பந்தத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகையை விட ரூபா 1,700.84 மில்லியன் அதிகரித்துள்ளது. | NWPCP-ICB-2- நபதகஹவத்தை முதல் மஹகித்துல நீர்த்தேக்க நுழைவாயில் சுரங்கப்பாதை வரையிலான பிரதான கால்வாய்க்கான ஒப்பந்த விலையானது, தடைசெய்யப்பட்ட வலதுபுற பாதையுடன் குறிப்பாக கால்வாய் வடிவமைப்பு சீரமைப்புக்களில் ஏற்பட்ட நோக்கெல்லை மாற்றங்களின் காரணமாக அதிகரிக்கப்பட்டது. | பாதிக்கப்பட்ட அனைத்து காரணிகளையும் கருத்தில் கொண்டு நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டு அதன் இலக்குகளை அடைந்துகொள்வதற்கான திட்டங்களின் பிரகாரம் செயற்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | கால்வாய் ஒப்பந்தத்தின் அசல் வடிவமைப்பில் உள்ள குறைபாடுகளை சீர்செய்வதற்காக, ரூபா 97.52 மில்லியன் திட்டமிடப்பட்ட நிதியேற்பாட்டிற்கு மேல் அதிகமாகச் செலவிடப்பட்டதுடன், எதிர்காலத்தில் அந்தத் தொகை ரூபா 600 மில்லியனிற்கு மேல் அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டது. | NWPCP-ICB-2 இன் ஒப்பந்த விலையானது அசல் BOQ- 9.01% அளவு அதிகரிப்பு, வேலைகளின் வேறுபாடு - 16.24%, விலை உயர்வு தொடர்பான காணி கையளிப்பு தாமதங்கள்/EOT'S - 8.28% மற்றும் வழக்கமான விலை உயர்வுகள் - 65.9% ஆகியவற்றின் காரணமாக அதிகரித்தது.<br>மேற்படி விபரங்களுடன், 65.9% அதிகபட்ச சதவீதம் 2022 மார்ச் முதல் விலை அதிகரிப்பு எதிர்கொள்ளலை ஆக்கிரமித்துள்ளது. | பாதிக்கப்பட்ட அனைத்து காரணிகளையும் கருத்தில் கொண்டு நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டு அதன் இலக்குகளை அடைந்துகொள்வதற்கான திட்டங்களின் பிரகாரம் செயற்படுத்தப்பட வேண்டும். |
| (ஈ) | ஐ.அ.டொலர் 22.09 மில்லியன் பெறுமதியான ஆலோசனை சேவை உடன்படிக்கை 2015 நவம்பர் 16 இலிருந்து 60 மாத காலப்பகுதிக்கு நிகழ்ச்சித்திட்டத்தின் 1 வது பகுதிக்காக கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் 97 மாதங்களால் 2023 திசெம்பர் வரை நீடிக்கப்பட்டது. கால எல்லை நீடிப்பு காரணமாக 06 சந்தர்ப்பங்களில் உடன்படிக்கை திருத்தப்பட்டது. ஆசிய அபிவிருத்தி வங்கியினால் பகுதி 1 மற்றும் 2 இற்கான ஆலோசனை சேவைக் கட்டணமாக ஐ.அ.டொலர் 25.93 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், 06 சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களின் பிரகாரம் ஆலோசனைச் சேவைக் கட்டணம் ஏறத்தாழ ஐ.அ.டொலர் 47.82 மில்லியன் வரை அதிகரித்துள்ளது. | ஒப்பந்தத்திற்காக வழங்கப்பட்ட கால நீடிப்பு காரணமாக ஆலோசனைக் கிரயம் அதிகரித்துள்ளது.<br>தற்போதைய பொதிகளுடன் நிர்மாண நடவடிக்கைகளை குறைப்பதை கருத்தில் கொண்டு உள்ளூர் மற்றும் வெளிநாட்டு நிபுணர்களின் உள்ளீடுகளை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். NWPCP-ICB-1 பொதிகளுக்காக இறுதிசெய்யப்பட்டு தீர்மானிக்கப்பட்ட பின்னர் 3 மாதங்களுக்குள் RE அலுவலகத்தை மூடுவதற்கு மேலும் நடவடிக்கை எடுக்கப்படும். சர்வதேச உள்ளீடுகளை ஒதுக்கீடு செய்வதற்கு ஏற்கனவே கட்டுப்பாடுகள் அமல்படுத்தப்பட்டுள்ளன. முழுநேர பணிக்கு பதிலாக உள்ளீடுகளை மாத்திரமே கொண்டு தேசிய பதவியணியினரை புதிதாக பணிக்கமர்த்துதல் பரிந்துரைக்கப்பட்டது. | மேலதிக செலவினங்களைக் குறைத்து, குறித்த காலத்திற்குள் நிர்மாணங்களை பூர்த்தி செய்வதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | கொழும்பு செயற்திட்ட அலுவலகம் மற்றும் நிர்மாண ஒப்பந்தங்கள் நிறைவேற்றப்படும் 08 வேலைத்தளங்களில் நிறுவப்பட்ட ஆலோசகர்களுக்கு சொந்தமான அலுவலகங்களில் பணிபுரியும் | எனினும், தற்போதைய பெறுமதி சரியானதாகும். சராசரி சீர்செய்யப்பட வேண்டும் | நிதிக் கட்டுப்பாடுகள் பலப்படுத்தப்பட வேண்டும். |

பதவியணியினரின் சம்பளம் உட்பட மாதாந்த ஆலோசனைக் கட்டணங்களாக ரூபா 85 மில்லியன் ஆலோசனை நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டது. செயற்திட்ட காலப்பகுதியின் அடிப்படையில் ஆலோசனைக் கட்டணங்கள் செலுத்தப்பட்டதால் இந்த கிரயம் அதிகரித்துள்ளது. நிர்மாண ஒப்பந்தங்களின் கால எல்லை நீடிக்கப்பட்டுள்ளதுடன் ஒப்பந்தங்கள் மெதுவாக முன்னேறி வருகின்றன.

## 2.3 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
| --- | --- | --- |
| 2022 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளவாறு 2016 முதல் 2022 வரையிலான காலப்பகுதிக்கு ஒதுக்கப்பட்ட நிதியை குறைவாகப் பயன்படுத்தியதால் செயற்திட்டத்தால் ரூபா 106.55 மில்லியன் தொகையான கடப்பாட்டுக் கட்டணங்கள் ஏற்பட்டுள்ளன. | நிர்மாண ஒப்பந்தங்களுக்கு EOT வழங்கப்பட வேண்டும். எதிர்பாராத மற்றும் கட்டுப்படுத்த முடியாத நிகழ்வுகள் காரணமாக திட்டமிட்டவாறு எதிர்பார்த்த இலக்குகளை அடைந்துகொள்ள முடியாதிருந்தது. எனவே, ஆசிய வங்கியிடமிருந்து ஒதுக்கப்பட்ட நிதிகள் குறைவாக பயன்படுத்தப்பட்டது. | நிதிக் கட்டுப்பாடுகள் பலப்படுத்தப்பட வேண்டும். |